# திறவுகோல்

2057 / தை

மாத இதழ்



வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# செயற்கை நுண்ணறிவும் கல்வியின் எதிர்காலமும் (AI ஓர் அறிமுகம்)

21ஆம் நூற்றாண்டின் அறிவியல் தொழில்நுட்ப வெடிப்பு உலகில் மிக முக்கியமான புரட்சியாகக் கருதப்படுவது செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) ஆகும். மனித மூளையின் சிந்தனை, தீர்வு காணும் திறன், கற்றல் செயல்முறை ஆகியவற்றை இயந்திரங்கள் பின்பற்ற வைக்கும் நவீன அறிவியலாக இது விளங்குகிறது. "செயற்கை நுண்ணறிவு" என்ற சொல் 1956ஆம் ஆண்டு அமெரிக்க விஞ்ஞானி ஜான் மெக்கர்த்தி (John McCarthy) அவர்களால் உருவாக்கப்பட்டது. அதன்பிறகு இத்துறை கணினி அறிவியல், மனவியல், புள்ளியியல், மொழியியல், நரம்பியல் அறிவியல் போன்ற பல துறைகளுடன் இணைந்து விரிவடைந்தது.

மனிதர்கள் போல் சிந்திக்க, திட்டமிட, முடிவெடுக்க இயந்திரங்கள் செயல்படுவது செயற்கை நுண்ணறிவின் அடிப்படை நோக்கம் ஆகும். இதன் மூலம் தொழில்நுட்ப வளர்ச்சி வேகமாகி, கல்வி, மருத்துவம், தொழில்துறை, தகவல் தொடர்பு போன்ற துறைகள் அனைத்தும் பெரும் மாற்றத்தைக் கண்டுள்ளன.

செயற்கை நுண்ணறிவின் வரலாறு என்பது 1940களின் இறுதியில் தொடங்குகிறது. 1943இல் வாரன் மெக்கல்லச் (Warren McCulloch) மற்றும் வால்டர் பிட்ஸ் (Walter Pitts) ஆகியோர் "A Logical Calculus of Ideas Immanent in Nervous Activity" எனும் கட்டுரையில் நரம்பணு மாதிரி (Neural Model) பற்றிய முதல் கோட்பாட்டை முன்வைத்தனர். அதன் பின் 1950இல் ஆலன் டூரிங் (Alan Turing) தனது புகழ்பெற்ற "Computing Machinery and Intelligence" என்ற கட்டுரையில் "ஓர் இயந்திரம் சிந்திக்க முடியுமா?" என்ற கேள்வியை எழுப்பி, Turing Test எனப்படும் சிந்தனைச் சோதனையை உருவாக்கினார்.

1956_இல் நடைபெற்ற மாநாட்டில் ஜான் மெக்கர்த்தி, மார்வின் மின்ஸ்கி, கிளோட் ஷானன் போன்றோர் செயற்கை நுண்ணறிவைத் தனித் துறையாக நிறுவினர். 1960களில் "ELIZA" என்ற முதல் மொழி மாதிரி (Language Model) உருவாக்கப்பட்டு, இயந்திரங்கள் மனித உரையாடலைப் பின்பற்ற முடியும் என நிரூபிக்கப்பட்டது.

1980களில் Expert Systems எனப்படும் நிபுணர் அமைப்புகள் உருவாகின. இவை மருத்துவம், பொறியியல், வணிகம் போன்ற துறைகளில் தீர்வுகளை அளித்தன. 1997இல் IBM நிறுவனத்தின் Deep Blue என்ற கணினி உலகச் சதுரங்க சாம்பியன் Garry Kasparov-ஐ வென்றது

செயற்கை நுண்ணறிவின் வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

2010க்குப் பிறகு இயந்திர கற்றல் (Machine Learning) மற்றும் ஆழ்க் கற்றல் (Deep Learning) ஆகிய துறைகள் வேகமாக வளர்ந்தன. 2020களில் ChatGPT, Google Bard, Claude, Gemini, Meta AI போன்ற உரையாடல் நுண்ணறிவுகள் உருவாகி, கல்வி, மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி, நிரலாக்கம் போன்ற துறைகளில் புரட்சியை ஏற்படுத்தின.

செயற்கை நுண்ணறிவு பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது:

(அ) குறுகிய செயற்கை நுண்ணறிவு (Narrow AI)

குறுகிய அல்லது வலுவற்ற செயற்கை நுண்ணறிவு குறிப்பிட்ட பணிகளை மட்டும் செய்யக்கூடியது. உதாரணமாக, குரல் அடையாளம் காணும் Siri, Alexa, முகம் அறிதல், மொழிபெயர்ப்பு செயலிகள் ஆகியவை.

(ஆ) வலுவான செயற்கை நுண்ணறிவு (General AI)

இது மனிதர்களைப் போல் அனைத்துத் துறைகளிலும் சிந்திக்கக் கூடிய ஒரு உயர் நிலை நுண்ணறிவு வடிவமாகும். தற்போதைக்கு இது ஆராய்ச்சி நிலையிலேயே உள்ளது.

1. Machine Learning (இயந்திரக் கற்றல்) - தரவுகள் மூலம் இயந்திரம் தானாக கற்றுக்கொள்கிறது.

2. Deep Learning (ஆழ்க் கற்றல்) - நரம்பு பின்னல்கள் (Neural Networks) மூலம் மனித மூளையின் செயற்பாட்டைப் பின்பற்றுகிறது.

3. Natural Language Processing (NLP) - மனித மொழியை இயந்திரம் புரிந்துகொள்வது.

4. Computer Vision - படங்கள், காணொலிகள் மூலம் பொருட்களை அடையாளம் காணுதல்.

5. Robotics - இயந்திரங்களை உடல் ரீதியாகச் செயல்பட வைப்பது.

செயற்கை நுண்ணறிவு இன்றைய உலகில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன் முக்கியத்துவத்தைப் பின்வரும் அம்சங்களால் விளக்க முடியும்.

(அ) வேகமும் திறனும்
AI இயந்திரங்கள் மனிதரை விட வேகமாகத் தரவைப் பரிசோதித்து முடிவுகளை அளிக்கின்றன. பெரும் அளவு தரவுகளில் இருந்து சில நொடிகளில் தீர்வுகள் கிடைக்கின்றன.

(ஆ) துல்லியம்
மனிதத் தவறுகள் குறைகின்றன. மருத்துவத் துறையில் நோய்க் கண்டறிதல், விண்வெளி ஆராய்ச்சியில்

தரவுப் பகுப்பாய்வு ஆகியவை மிகத் துல்லியமாக முடிகின்றன.

(இ) நேரம் மற்றும் செலவு மிச்சம்
தானியக்கமயமான செயல்முறைகள் மனிதப் பணிச்சுமையை குறைத்து, உற்பத்தித் திறனை அதிகரிக்கின்றன.

(ஈ) அறிவு விரிவாக்கம்
AI உலகளாவிய தரவுகளை ஒருங்கிணைத்து, புதிய அறிவை உருவாக்குகிறது. கல்வித் துறையில் இது கற்றல் அனுபவத்தைத் தனிப்பயனாக்குகிறது.

(உ) முடிவெடுக்கும் ஆதரவு

AI அடிப்படையிலான தீர்வு உதவி மையங்கள் (Decision Support Systems) நிறுவனங்களுக்கு தரவு சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகின்றன.

கல்வித் துறையில் AI மாணவர்களின் திறன், ஆர்வம், கற்றல் வேகம் ஆகியவற்றைப் பொறுத்து ஏற்பு கற்றல் மையங்கள் (Adaptive Learning Systems) மூலம் தனிப்பயன் கற்றலை வழங்குகிறது.

உதாரணம்: Duolingo, Coursera, ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவுத் தளங்கள் மாணவர்களின் கற்றல் அணுகுமுறைக்கு ஏற்ப உதவுகின்றன.

மருத்துவத் துறையில் AI நோயறிதல், மருந்து வடிவமைப்பு, நோயாளிக் கண்காணிப்பு போன்ற துறைகளில் பெரும் பங்களிப்பை வழங்குகிறது. IBM Watson Health, Google DeepMind போன்ற அமைப்புகள் மருத்துவத்துறையில் செயற்கை நுண்ணறிவை வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றன.

அதுபோல தொழில்துறை மற்றும் வணிகத்தில் தானியங்கி உற்பத்தி, வாடிக்கையாளர் சேவை (Chatbots), சந்தை பகுப்பாய்வு, கணக்கீடு போன்ற துறைகளில் AI பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் முகம் அறிதல், கண்காணிப்பு அமைப்புகள், தானியங்கி வாகனங்கள் (Self-Driving Cars) ஆகியவை செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பை வெளிப்படுத்துகின்றன.

இதுதவிர, மொழி மற்றும் தொடர்பியலில் இயற்கை மொழிச் செயலாக்கம் மூலம் மொழிபெயர்ப்பு, குரல் அடையாளம், தானியங்கி எழுத்து உருவாக்கம் ஆகியவை எளிமையாகியுள்ளன.

எனினும், செயற்கை நுண்ணறிவு மனிதனுக்குப் பல நன்மைகளை வழங்கினாலும், சில முக்கிய அறைகூவல்களும் முன் நிற்கின்றன:

1. தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு: பெருமளவு தரவுகள் சேகரிக்கப்-

படுவதால் தனியுரிமை மீறல் அபாயம் உள்ளது.

2. வேலைவாய்ப்பு மாற்றம்:
தானியக்கம் பல பாரம்பரிய பணிகளை மாற்றுவதால் மனித வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படுகின்றன.

3. நெறிமுறைகள் மற்றும் பொறுப்புத்தன்மை:

செயற்கை நுண்ணறிவின் முடிவுகள் தவறான விளைவுகளை ஏற்படுத்தும் போது யார் பொறுப்பேற்க வேண்டும் என்பது இன்னும் விவாதப் பொருளாக உள்ளது.

4. பாகுபாடு மற்றும் சமத்துவம்:
AI மாதிரிகள் பயன்படுத்தும் தரவுகளில் பாகுபாடுகள் இருந்தால் முடிவுகளும் பாகுபாடுகளாகி விடும்.

இனிமேல் செயற்கை நுண்ணறிவு சூழலியல் நுண்ணறிவு (Contextual Intelligence), நெறிமுறை - நுண்ணறிவு (Ethical AI) போன்ற வடிவங்களில் முன்னேறும். செயற்கை நுண்ணறிவை மனித மதிப்புகளுடன் இணைக்கும் முயற்சிகள் எதிர்காலத்தின் மையமாக இருக்கும்.

செயற்கை நுண்ணறிவு இன்று மனித சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும் தனது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மனித சிந்தனை, கற்றல், தீர்வு காணும் திறன்களை இயந்திரங்கள் பின்பற்றுவது தொழில்நுட்பத்தின் உச்சமாகும். ஆனால் அதனைப் பயன்படுத்தும் மனிதனின் மதிப்புகள், நெறிமுறைகள், பொறுப்புணர்வு ஆகியவை அதைவிட முக்கியமானவை.

மனிதனின் நுண்ணறிவை விரிவாக்கும் கருவியாக செயற்கை நுண்ணறிவை நாகரிகமாகப் பயன்படுத்தினால், அது உலகில் சமத்துவம், கல்வி, ஆரோக்கியம், வளர்ச்சி ஆகியவற்றுக்கு மிகப் பெரிய வித்தாக அமையும். குறிப்பாக, இனிவரும் காலங்களில் இதன் தாக்கம் எந்த அளவிற்கு கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தவிருக்கிறது என்பதை அடுத்தடுத்து விரிவாகக் காண்போம்.

இன்னும் பேசுவோம்...

—

முனைவர் மணி கணேசன்,
மன்னார்குடி.

---

# தோழன்

பூமியெங்கும்
கொட்டிக் கிடக்கும்
பனித்துளிகளை
உறிஞ்சுகிறது
விடியல்

இலைகளும்

பூக்களும்
உயர்துகின்றன
தனது தோள்களை

சன்னலின் வழியே
உள்நுழைந்து
உறங்குபவரை எழுப்பி
உழைக்க அழைக்கிறது

பல கோடி
விளக்குகளை
அணைக்கச் செய்து
ஒற்றை விளக்காக
வானில் எரிகிறது
சூரியன்

அதிகாலையிலும் சிகப்பு
அந்தி மாலையிலும் சிகப்பு
உழைப்பின் குறியீடு
தெரிகிறது வானில்

உழைப்பாளிகளின்
வழியும் வியர்வையில்
மின்னுகிறது வைரமாய்...

வீட்டின்
முன்பக்க வாசலிலிருந்து
பின்பக்க வாசலுக்கும்
ஒரு பக்க சன்னலிலிருந்து
மறுபக்க சன்னலுக்கும்
நகர்ந்து மறைகிறது
சூரியன்

மறைந்தாலும்
நிலாவின் வழியே
எட்டிப் பார்த்து
பூமியைத் தொடரும்
காதலன் சூரியன்

பகலிலேயே
சிகப்பு
ஆரஞ்சு
வெள்ளையாக
ஆடைகளை மாற்றும்
சூரியன் முன்
ஆடையின்றி இருக்கிறது
இயற்கை

சூரியன்
அகன்றதும்
இவ்வளவு துக்கமா?
எல்லோரும் பூமியில்
சூடிக் கொள்கிறார்கள்
கருப்பு ஆடையை

கை
விடுவதில்லை சூரியன்
அதிகாலையில் மீண்டும்
வருகிறான்
சரித்திரம் அல்ல
சாதனையும் அல்ல
இயற்கையின் நியதி
இதுவே!



- சா. கா. பாரதி ராஜா,
மனை எண் 1, ஹரிஹரன் நகர்,
வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,
செங்கல்பட்டு - 603101.
பேச - 9944315732

# தேவ தூதர்களுக்கு

மேடை ஏறிய மறு நொடியே
அறிவுரைக்க
தோன்றுவது ஏன்
மைக் பிடித்த மாத்திரத்தில்
மண்டையில்
கொம்புகள் எப்படி
அரை அடி உயரம்
கை நீட்டி
வாய் கோணித்து
பேச செய்வது எது
சட்டென தலைவன் ஆகி
தனக்கு தானே முடி சூடி
மூச்சு முட்ட
வாயால் தவில் வாசிக்க
முடிவது எவ்வாறு
தன்னை தேவதூதனாக
நினைத்துக் கொள்வதில்
தவறில்லை
எதிர் இருப்போரை
ஆட்டு மந்தையாக
யோசிப்பது தவறு
ஆகச் சிறந்தவைகளை
கண்டு பிடிக்கிறதோ
இல்லையோ
நண்பர்களே
அரைகுறைகளை
கண்டு கொள்ளும்
அரங்கம்

## நேற்று வரை இருத்தல்

ஒன்றுமே செய்ததில்லை
இன்று இல்லாமை
என்னவோ செய்கிறது
காலியானது
எதிர் வீடு மட்டுமா

## மடி கிடத்தினால் போதும்

மறுநாள் பழையபடி
பாய்ந்தோட தொடங்கி விடும்
பூனைக்கும்
மனசு சரியில்லாமல் போவது
புரிந்த பிறகு
அன்னை மடிதான்
ஆண் மடியும்

## நகர்ந்து விட்டேன்

அது நிகழ்ந்திருக்க கூடாது
மற்ற வழியெல்லாம்
மறந்தாலும்
உற்ற வழியையும்
எப்படி மறந்தேன்
வெளி கலையட்டும்
உள்ளும் சிதற
யார் அனுமதித்தது
முன்பெப்போதும்
இப்படி இல்லை தான்
பின்பெப்போதும் இது
இப்படியே இருந்தால் எப்படி
நகர்ந்து விட்டேன் என்றும்
நம்பாத என்னை
பின் தொடர
விட்டு விட்டேன்
வந்து சேர்ந்து
நானாக
ஆகி விட்டதை
நம்பாமல் நம்பிக்
கொண்டிருக்கையில்
கேட்க தோன்றுகிறது
எது நிகழ்ந்திருக்க கூடாது

— கவிஜி

# குறுங்கவிதைகள்

*1)*
*மழையுதிர*
*மலருதிர*

*இலையுதிர*
*இறகுதிர*

*அலையுதிர*
*நிலவுதிர*

*இரவுதிர*
*பகலுதிர*

*கலியுதிர*
*வலியுதிர*

*கனவுதிர*
*கணமுதிர....*

*உன்*
*நினைவுகளுக்கு மட்டும்*
*ஏனிந்த அடம்!!*

*2) தின்று தின்று*
*வளர்ந்திருக்கிறது*
*என்றாலும்,*
*தீராத பசிதான்*
*இன்னும் இன்னும்...*

*அன்பெனும் அன்னம்*
*கொண்டு வா*
*என்னிதயத்திற்கு!*

*3) கோபித்துக்கொண்டு*
*கண் காணா தூரம் போய் விட*
*எண்ணினாலும்*
*கணத்தில் அதைக்கைவிட்டு*
*உன்*
*கன்னமுரசுகிறது*
*இந்தக்காதல்!!*

*4) பார்த்து பிரிவதை விட*
*பிரிவதை செவித்துக்கொள்வதில்*
*கொஞ்சம் பரவாயில்லை,*
*பிரிதலின் வலி!!*

*5) எனக்கு நீ*
*உனக்கு நான்*
*காப்பாற்றிக்கொள்ளவென்று*
*நம்பியிருந்தோம்*
*அது நடக்கவில்லை*
*ஆயினும்*
*இறுதிவரை*
*நம்மைக் காப்பாற்றி*
*கரை சேர்த்திருந்தது*
*காதல்!!*

*6) காலம் காயமாற்றவில்லை...*
*காதல்தான் காயமாற்றியது,*
*கைவிட்ட பின்னும்!*

## ஒளிந்து கொள்ளாமல்...

*இரவின் ஊடாக*
*ஒளிந்திருக்கிறது*
*பகல்*

மழையினூடாக
ஒளிந்திருக்கிறது
வானவில்

கருமுகிலூடாக
ஒளிந்திருக்கிறது
கடல்

மௌனத்தினூடாக
ஒளிந்திருக்கிறது
துயரம்

புன்னகையூடாக
ஒளிந்திருக்கிறது
மகிழ்வு

கனவினூடாக
ஒளிந்திருக்கிறது
நிறைவேறா ஆசைகள்

ஒளிந்து கொள்வதனூடாக
ஒளிந்திருக்கிறது
கூச்சம்

ஒளிந்து கொள்ளாமல்
மதர்த்துக் கிடக்கிறது
பெண்ணின் நேசம்

## சுனை நீரென....

மெல்லத் துடித்தழுது சொல்லாது
செத்துக் கொண்டேயிருப்பது
சிறு சிரிப்பால் பூசி மெழுகப்படுகிறது

இன்னதென்று தெரியாத வல்லூறு
இதயம் பிராண்ட
அதிகபட்சமாக வழியும்
இரத்தக்கசிவை சுருக்கமாக
மௌனச்சீலை கொண்டு துடைக்க
முடிகிறது

மரம் வளர உதிர்ந்த வண்ணம் இருக்கும்
பழுத்தவிலை வெயிலில் காய்ந்து
சருகாவது போல ஒவ்வொரு நாளும்
கழிவதில் கடப்பாடுதானே ஒழிய,
திருப்திதானே தவிர பூக்களில்லை
வாணாளில்..
பூரண வருடல்களில்லை வரலாற்றில்..

கழிந்து உதிர்ந்தவை
பின்னும் உரமாதலில் கூடுதல் திருப்தி
அடைதல் கூடும்
அவர்கள்
இருக்கட்டும்..
காய்ந்து கொண்டேயிருப்பதுதான்
சருகின் இலட்சணவிலட்சியம்
என்றறிந்தும் இவர்கள்
அறியாதிருக்கிறார்கள்

பொழுதுகள் கடந்தாலும்
உபயங்கள் உபயோகித்தாலும்
தப்பர்த்தங்கள் தடயங்களாகித்
தொடர்ந்து ஊருகின்றன கிழக்கில்..
எனினும் மேற்கு வானில்
மஞ்சள் பூசி உங்களை இரசிக்கச்
செய்வேன்

இதுதவிர இன்னும் நிறையவே உள்ளன
நினைவுகளில்
பாறை இடுக்குகளில் பாயும்
சுனை நீரென
அவை உங்களை ஈரலித்து வசந்தத்தின்
சுகந்தத்தை


பிரவாகிக்கும்
ஆயினும் சிலாகிக்கவொண்ணா
நிலை உறக்கத்தில்
ஆழ்ந்து விட்ட
மலைவாசிகளென உங்கள் விழிகள்

மறுபடியும் கனவுகள் வரும்
மறுபடியும் விடிவெள்ளி தோன்றும்
மறுபடியும் விடியல் புலரும்
ஒருபோதும்
விட்டுக்கொடுக்காத
கட்டுக்கடங்காத
நேசத்தின் அகத்தூண்டலில்
ஆழ்ந்த கிருபை பெற்றுவிட்டேன்

அஃதது அவ்வாறே இருக்கட்டும்
எத்தனையோ துயரங்கள் இருக்க
இல்லையென்றேதானே
கவிதை
எழுத முடிகிறது....!!

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர், இலங்கை.



---

# வைபோகம்

ஊரில் இருக்கும் தெருக்களுள்
வடக்குத்தெரு தான் அகலமானது

இந்த அகலத்தை நிர்ணயிக்க
திருவில்லிபுத்தூர்
தேரோடும் வீதியைப் போய்
அளவெடுத்து வந்தார்கள் என்று
பாட்டி சொல்வாள்

வடக்கு நெட்டு வீடுகளுக்கும்
தெற்கு நெட்டு வீடுகளுக்கும் இடையே
தெரு கிழக்கு மேற்காக நீளும்

'யார்யாரு வந்தாலும் தேரோடாது மாரி
மதுர பட்டரு வந்தாலும் தேரோடாது
வஞ்சிக்கொடி போல
நம்மூரு மாரியாத்தா வந்து
வடம் தொட்டா தேரோடும்' என்ற
கும்மி பாட்டு
திருவில்லிபுத்தூர்
ஆடிப்பூர ஆண்டாள் தேரோட
இங்கிருந்து அங்கே போய்
மாரியம்மன் வடம் பிடிக்கிறாள்
என்பதைக் குறிக்கிறது

இடிப்புந்தால் உந்தி தள்ளி
அரைநாளில் நிலைக்கு
இப்போது வந்து விடுகிறது தேர்

அதனால் நமக்கு
அறியக் கிடைக்கவில்லை
மாதக்கணக்கில்
தேர் ஓடிய வைபோகங்கள்.

*- மு. ஆறுமுக விக்னேஷ்,*
சத்திரப்பட்டி - 626102.

# குழந்தை வரையும் ஓவியத்தில்

அதிகமாய் புன்னகைக்கிறார்
புத்தர்

உன் கரம் பட்டதும்
வட்டமிடுகின்றன
நீரலைகள்

உதிர்ந்தும்
உயிர் பெற்று விடுகின்றன
சூடும் பூக்கள்

கல்லறை மீது முளைத்த செடிகள்
கருவறைகளைச் சுமக்கின்றன
பட்டாம்பூச்சியின் முட்டைகள்

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 63807 04001



# பொங்கலுக்குத் தெரியாது

கலப்பை இருந்த இடத்தில் டிராக்டர்

மாடு நின்ற இடத்தில் மகிழுந்து

வாய்க்காலில் ஓடிய தண்ணீர்
சொட்டுநீராய்

நெற்கதிர் நின்ற இடத்தில் யூகலிப்டஸ்
மரங்கள்

தூர்ந்துபோன கிணறுகளில்
ஆயிரம் அடி ஆழ்குழாய்

ஆனைகட்டி போரடித்த ஊரில்

வைக்கோல் கட்டு நூற்றி ஐம்பது
ரூபாய்க்கு வியாபாரம்

குளம் முழுவதும் நிரம்பிக்கிடக்கின்றன
வீடுகள்

தரிசு நிலங்களில்
நல்ல விளைச்சல்
ரியல் எஸ்டேட்

ஊருக்கு சோறுபோட்டவன்
ரேசன் கடை வரிசையில்

எதுவும் தெரியாமல்
வருடம் ஒரு முறை வருகிறது
சம்பிரதாயப் பொங்கல்

—

நேசன் மகதி



# புதுக்கவிதை

பலி கொடுத்து
வரம் கேட்கும்
பக்தனுக்கு
வரம் கொடுத்து
பலி தீர்த்தது....!
பருவநிலை தவறி
பெய்த மழை...!

கொட்டி தீர்த்த மழையின் மீது
கோபம் கொள்ளாமல்
கட்டி அணைத்து கொண்டது
பூமி.....!

தவறி பெய்தால் மழையால்
தவறாமல் போனது
நெற்பயிர்கள்.....!

வங்கி கடனை கட்டாமல்
போட்டதால் காணாமல் போனது
விளைநிலம்.....!

அய்யனார் கோவிலுக்கு போட்ட
நேர்த்திக்கடனை நிறைவேற்ற
முடியாததால்
நிம்மதியாய் நின்றது ஆடு....!

— ச. சத்தியபானு



# பசித்திருக்கும் பூனை

அடைமழை நின்றது
மரங்களின் முகத்தில்
ஆனந்தக் கண்ணீர்

இரவின் சாபம்
சுமைதூக்கி வதைகிறது
தேய்பிறை நிலா

செவிடான கடற்கரை
கடலறிய வாய்ப்பில்லை
வீணாகும் அலைமொழி

எலியை நம்பியல்ல
இரவை நம்பி வாழ்கிறது
பசித்திருக்கும் பூனை

அந்தியில் தொலைத்த
கதிரவனைக் கண்டறியும்
அபலைத்தாய் விடியல்

சுட்டெரிக்கும் கோடை
ஆறுவழிச் சாலை
கானலாய் நிழல்

பனிப்பொழியும் விடியல்
மேலும் தாமதம்
கதிரவன் ஊர்வலம்

கன்று இறந்துவிட்டது
பொம்மை உருவம் காட்ட

மடிசுரக்கும் பசு

பகலை வன்புணரும்
இரவின் கருவில்
குழந்தை நிலா

உழைப்பாளியின்
வலிய கரங்களில்
விலகாத வறுமை

பயனற்ற கட்டடம்
இடிபாடுகளுக்கு நடுவே
பழகிய இதயங்களின் சுவடுகள்

நகரும் நதியில்
நகராமல் அசைகிறது
கரையோர மரநிழல்

நெடுஞ்சாலை கடக்க முயன்று
விபத்துக்குள்ளான பட்டாம்பூச்சி
நிறநிறமாய்ச் சிதைந்தது

முதல் துளிக்குத்தான் அச்சம்
நனைய துவங்கி விட்டால்
ஒருகை பார்த்துவிடலாம் மழையை

மெதுவாக நகரும் நத்தை
விரைவாக நகரும் ஓடை
மறைவாக பதுங்கும் பாம்பு

இன்றும் பொழியவில்லை
வானத்தை நம்பியவன் விழிகளில்
அடுத்தடுத்த அடைமழை

கதிரவன் உதயம்
பரிபோகும் பனித்துளி கீரீடம்
பதறும் புல்வெளி

மக்களின் வரிப்பணம்
மக்களுக்கேச் சமர்ப்பணம்
பொங்கல் பரிசு

நெகிழிக் குவளையில்
கரும்புச் சாற்றின் சுவை
கூடுதல் புளிப்பு

அறுவடைக் காலம்
குறுக்கிடும் பெருமழை
விவசாயி சாபம்

விரைவு இரயிலில்
முன்பதிவு இல்லை
உறங்கா விழிகள்

தூரத்தில் குயிலோசை
இரைச்சல் தொழிற்சாலை
விடாமல் துரத்தும் வேலை

காற்றுக்குச் சொந்தமாகி
ஆகாயம் அளக்கிறது
நூலறுந்த பட்டம்

குழந்தையின் கைகள்
விலங்கிட்டு மகிழ்கிறது
திறன்பேசி பொம்மை

வறுமை வாழ்வு
பிரிய சம்மதம்
அழிந்த காதல்

கணவனை இழந்தவளை
மெல்லத் தேற்றுகிறது
குழந்தையின் சிரிப்பு

கைநாட்டு அம்மா
கடுமையான உழைப்பு
கல்லூரியில் மகள்

தலையை அழுத்தும் சுமை
போராட்ட வாழ்க்கை
தன்மானம் பெரிது

கூடுதல் வெட்கத்தில்
பேரழகாய் மின்னுகிறது
அந்திமழை வானம்

ஆடு மாடு கோழி
ஆயுள் நீட்டிப்பு
புரட்டாசி மாதம்

காக்கையின் கூட்டில்
அகதியாய் வளரும்
குயிலின் குஞ்சு

சாக்கடை நாற்றம்
பொறுத்திடும் நாசி
வாடகை குறைவு

சாலை மறியல்
சாகும்வரை உண்ணாவிரதம்
நெருங்கும் தேர்தல்

பருத்தி ஆடையைப்
பரிகாசம் செய்கிறது
பட்டுப்புழு கொன்ற ஆடை

ஆக்கரமித்த நிலம்
அடையாளம் காட்டும்
வெள்ளப் பெருக்கு

எளிதாய்க் கிடைக்கும்
இரையை விழுங்க
தூண்டிலில் மீன்கள்

ஆதாயம் தேடி
கொடி மாற்றும் கைகள்
தேர்தல் காலம்

மொட்டை மாடி
பௌர்ணமி வெளிச்சம்
இருளில் வீடு

உள்ளுக்குள் பகை
புன்னகை உதடு
சுயநல உறவு

கூட்டணி முறிவு
கிடுக்கிப்பிடிச் சோதனை
வருமான வரி

அழுக்குப் படிந்து
யாசிக்கும் கைகளில்
பழைய பணத்திமிர்

—

பொன்.தெய்வா
ஐவேலி
விழுப்புரம் மாவட்டம்.



# யாகம்

கவிதையின்
பிரசவத்தை விட
உன் கையில்
சேரும் நாளில் தான்
அதிக வலி கண்டேன்

## சிறப்பு

தமிழிடம் வேண்டி
எழுத்தில் நின்று
வடித்தேன் கவிதை
இதழ்களைக் குவித்து முத்தத்தில்
எழுதுகிறாய் அழகானதொரு கவிதை

## பழி

எப்போது வருவாள்
ஏக்கத்தில் காலத்தைச் சுபித்தேன்
இப்போது வந்தாள்
எங்களைச் சபித்தது காலம் வேகமாய்
ஓடி.

## அங்கும் ...

நீ வராத போது
நீளாத நேரம்
நம் சந்திப்பில் மட்டும்
சட்டென ஓடுகிறது
காலக் கடவுளுக்கும்
காதலைச் சந்திக்கும்
அவசர வேலையோ?

## காமத்தின் இருட்டை

ஒளித்து வைத்த
மன வானம்
நட்சத்திரமென
பூக்க வைக்கிறது காதலை.

## கொன்றை மலரும்

கோடை மழையும்
ஒன்றில் ஒன்றென
நன்றாக கலந்திட
சித்திரை மாத மண்ணும் நீரும் சிக்கெனத்
தம்முள்
இறுகப் பற்றிட
மேகத்தின் கண்ணீரில்
கரைந்து போகிறது
வெயிலின் கால் தடமும் வேர்வையின்
உயிர்க் கூடும். வானம் பார்த்து சிரித்த
கதிர்கள் வயலுக்குள் மூழ்கிப் போக
கட்டிய துணியை கசக்கிப் பிழிந்து
கண்ணீரில் மிதக்கிறான்
கடைசி விவசாயி.
அறுவடை இயந்திரம்
விளைந்த வயலில் காத்து நிற்க மூழ்கிக்
கொண்டிருந்தன முற்றிய நெல்லும்
பற்றிய நம்பிக்கையும்

## கூண்டை

கூடென நினைத்து
இறக்கை விரித்தும்
அலகால் கொஞ்சியும் கால்களால்
கம்பிகளில் கோலமிட்டும்
கத்திக் கொண்டிருந்தன
பச்சை மக்காவும்
சிவப்பு மக்காவும் வேண்டுதலற்ற
வனத்தில் தீண்டுதலற்ற வெளியில்
பறக்கும் வரம் வேண்டி.



- இளையவன் சிவா,
கைபேசி: 9965359130

# இது ஒரு முடிவுரையல்ல ஒரு முகவுரை!

அர்ஜூன் இப்போது வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றவன் இன்னும் வரவில்லை. இப்போது நேரம் என்ன இருக்கும் என்று திரும்பி மதுரை பழங்காநத்தம் பஸ் ஸ்டாப்பில் உள்ள கடிகாரத்தைக் கவனித்த போது விடிகாலை 4.30 மணி என்றது. சாயங்காலம் 5 மணிக்கு அர்ஜூனோடு அவளும் பேருந்து நிறுத்தத்திற்கு வந்ததும் இருவரும் சர்பத் குடித்தனர்.

நான் போய் ஐயா இராமசாமி பேருந்து நிலையம் போவதற்கு ஆட்டோ கொண்டு வருகிறேன் என்றான் அர்ஜூன்.

ஆட்டோ எதற்கு பேருந்திலேயே போய் விடலாமே என்றாள் பத்மினி.

என் மகாராணியை வீணாக இந்த பஸ்ஸில் நெரிசலில் இடிபட விடுவேனா? என்று சிரித்து சொல்லிக் கொண்டே போனவன் திரும்பவேயில்லை.

இப்போது வந்து விடுவான் என்று நினைத்து இதில் அமர்ந்து தூங்கி போயிருக்கிறேன். இன்னும் வரவில்லை. என் நகைகளை கழற்றி பணம் பண்ணியதில் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்ட போது கூட அர்ஜூன் என்னை இப்படி ஏமாற்றி விட்டு போவான் என்று எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வது? பாம்பன் குளத்திலிருந்து நாகர்கோவில் பஸ்ஸில் டிக்கட் எடுக்க கூட பணம் இல்லாமல் வந்தவனிடம் பர்ஸை கொடுத்தேன், எவ்வளவு நம்பிக்கை வைத்து அவனோடு புறப்பட்டேன்.

நாகர்கோவிலில் புறப்பட்டு திருநெல்வேலி வந்து தங்கும் விடுதியில் ஒரு நாள் முழுவதும் நாம் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறோமே என்று ஆசை காட்டி என்னை சக்கையாய் பிழிந்து விட்டு அடுத்த நாள் என் நகைகளை சுழற்றி மார்வாடி கடையில் வைத்து பணம் வாங்கிக் கொண்டு மதுரை வந்து இங்கிருந்து சென்னை போய் வாழ்க்கை நடத்தலாம் என்று ஆசை காட்டி என்னை அழைத்து வந்த அர்ஜூனை நான் இந்த அளவிற்கு நம்பியது எவ்வளவு பெரிய பேரிடியாக விழுந்து விட்டது. என் எதிர்காலம் எனக்குள்ளே இருட்டாக தெரிகிறது. என்ன செய்வது எழுந்து மெதுவாக டீக்கடை வந்த போது எதிரில் இரண்டு இளைஞர்கள் அவளைப் பார்த்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கையில் ஐந்து காசு கூட இல்லாமல் பத்மினி தவித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு முதல் முறையில் தனித்து விடப்பட்டது. உரைக்க ஆரம்பித்தது.

வீட்டிலே மாமா வீட்டிற்கு போய் விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பினேன்.

மாமா வீட்டிற்கு போயிருந்தால் வீட்டிலிருந்து யாராவது நான் எங்கே போனேன் என்று தேட ஆரம்பித்து விடுவார்கள் என எண்ணிய போது குபுக்கென்று கண்ணீர் வர ஆரம்பித்தது.

என்ன செய்யப் போகிறோம் என்று புரியாமல் அவள் தவித்துக் கொண்டிருந்த போது நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு போகும் பஸ்ஸில் வந்த டிரைவர் முருகன் அவளைப் பார்த்ததும் ஏய் பத்மினி. என்ன இந்த நேரத்தில் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார்.

அவருக்கும் பாம்பன் குளம்தான் சொந்த ஊர். பத்மினியின் வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் தங்கியிருக்கிறார்.

அது வந்து... வந்து... என்று சொல்ல முடியாமல் தத்தளித்தவள் கண்டிப்பாக என்னைப் பற்றி இவருக்கு எதுவும் தெரிய வாய்ப்பில்லை என்று உணர்ந்த பிறகு, இங்கே மாமா வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு கிளம்பி வரும்போது ஆட்டோவில் என் பர்ஸை விட்டு விட்டேன். அதுதான் திரும்ப மாமா வீட்டிற்கு போவோமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றாள், தன் துக்கத்தை மறைத்துக் கொண்டு.

இனி எதற்கு மாமா வீட்டிற்கு திரும்ப போக வேண்டும். இந்தா நூறு ரூபாய் வைத்துக் கொள். வீட்டில் வந்து வாங்கிக் கொள்கிறேன். அதோ பார் நாகர்கோவில் பஸ் நிற்கிறது. வேகமாக கிளம்பு என்றார் முருகன்.

அழுகை பீறிட்டு வந்ததை அடக்கிக் கொண்டு வேகமாக கிளம்பினாள் பத்மினி. வீட்டில் பூகம்பம் வந்து முடிந்திருந்தது. அவள் மாமா வீட்டிற்கு போகவில்லை என்று தெரிந்ததும் அர்ஜுனையும் ஊரில் காணவில்லை என்று தெரிந்ததும், யாருக்கும் தெரியாமல் பத்மினியைத் தேட ஆரம்பித்ததில் பிரச்சனை ஆரம்பித்து அவளைக் கண்டதும் வீட்டிலுள்ள அனைத்து அங்கத்தினரும் நகை எங்கே? என்றும் எங்கே போயிருந்தாய் என்றும் கேள்விகளால் துளைத்து விட அப்பா மட்டும் கோபத்தால் பெல்ட்டைக் கழற்றி அவளை அடித்துத் தள்ளிவிட்டு ஆசைப் படுகிறேன் என்று சொல்லியிருந்தால் கூட உனக்கு அவனை திருமணம் செய்து வைத்திருப்பேனே பத்மினி. இப்படி ஒன்றுமில்லாமல் ஆகி வந்து நிற்கிறாயே என்று அழுதவாறு பெல்ட்டை தூர எறிந்து விட்டுப் போக பத்மினி ஒரு வாரம் கழித்து தன்னுடைய பழைய புத்தகங்களை ஒதுக்கிய போது கீழே விழுந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தாள்.

குமரேசன் அடுத்த தெருவில் வசிக்கும் தன் கல்லூரியில் படிக்கும். மாணவன் எழுதிய காதல் கடி தம். விரித்து வாசித்துப் பார்த்தாள்.

நான் உறவினன் என்றாலும் தூரத்திலிருந்து உன்னைத் தரிசிக்கும் ஒரு ஏழை என்று எத்தனையோ விதமாக எந்த விதத்திலும் அகம் பாவம் தொனிக்காமல் அழகாக தன் மனதை தெரிவித்திருந்தான்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. நான் கொண்ட காதல் என் நகையோடு கற்பையும் சூறையாடிக் கொண்டு போனது. நீ என்னை ஒரு தலையாய் காதலித்து தேவதையாய் தரிசித்திருக்கிறாய் என்று எண்ணியவாறு கடிதத்தை கிழிக்க முற்பட்ட போது வாசலில் நிழலாட, எட்டிப் பார்த்தான் குமரேசன்.

வா... குமரேசா அப்பா, அம்மா எல்லோரும் தோட்டத்திற்கு போயிருக்காங்க என்றாள்.

நான் உன்னைத் தான் பார்க்க வந்தேன்

என்ன விடயம்?

உன் கையிலிருக்கும் கடித விடயமாகத்தான் என்று குமரேசன் சொன்னதும் கையிலிருந்த கடிதத்தை மறைத்தாள்.

என்ன எதிர்பார்க்கிறாய்?

உன் பதிலைத்தான் பத்மினி

என்னை பற்றி உனக்கு என்ன தெரியும் குமரேசா?

அரசல் புரசலாக உன் அம்மா மூலம் எனக்கும் காதில் விழுந்தது.

நான் ஏற்கனவே ஒருவனைக் காதலித்தவள் என்பது..

தெரியும். அவனோடு ஓடிப் போய் நகைகளை இழந்துவிட்டு திரும்பவும் வீடு வந்ததும் தெரியும் .

என்னையே இழந்து விட்டு நான் வந்து நிற்பதை கண்டிப்பாக நீ தெரிந்திருக்க முடியாது குமரேசா

ஒரு பெண்ணைப் பற்றி அரசல் புரசலாக ஏதாவது கேள்விப் படும் போது ஒரு ஆண்மனம் முதலில் அவள் கற்பைப் பற்றிதான் கேள்வி எழுப்பும் பத்மினி. உன் தந்தையிடம் நீ சொல்லி அழும்போது நான் வாசல் வரை வந்து நின்று கேட்டு விட்டு உன்னைச் சந்திக்கும் மனநிலையில் அப்போது இல்லாமல் திரும்பி போனவன் நான்.

இனி இவ்வுலக வாழ்க்கைக்கு உபயோகமில்லாதவள் இந்தப் பத்மினி. என் வாழ்க்கையின் முடிவுவரை ஏற்கனவே எழுதப்பட்டு விட்டது.

அங்கே தான் நீ தப்புப் பண்ணுகிறாய் பத்மினி. வாழ்க்கையில் தவறு செய்தவர்கள் எல்லாம் தற்கொலை செய்து கொள்ள நினைத்தால் உலகமே சுடுகாடாகிப் போய்விடும்.

நான் உனக்கு லாயக்கில்லாதவள்

அப்படி ஏன் உன்னையே தாழ்த்திக் கொள்கிறாய். செய்த தப்பை மறந்து விட்டு கனவாக உதறி எறிந்து விட்டு வா. இனி நம் வாழ்க்கையின் முகவுரையை எழுத ஆரம்பிக்கலாம் பத்மினி .

குமரேசன் உண்மையாகவா சொல்கிறாய் என்றாள் பத்மினி கண்களில் பொங்கிய ஆனந்தக் கண்ணீரோடு...

—

## கவிஞர் இரஜகை நிலவன்,
மும்பை.

---

# தை பிறந்ததும்...

கடந்த முறைபோல்
இந்த முறையும்
எந்தக் குறைவுமில்லை
பொங்கலின் வருகைக்கு.

புத்தரிசி பூசணி கரும்பு
புதுப்பானை கனவோடு
ஒவ்வொரு முறையும்
வரத்தான் செய்கிறது
பொங்கல்.

வாசல் தெளித்து
கூட்டி மெழுகி
வர்ணக்கோலம் போடும்
கனவில்
அம்மாவும் அத்தையும்.

தொழுவச் சீரமைப்பு
மாடுகள் பராமரிப்பு
கொம்புகளுக்குச் சாயம்பூசும்
கனவில்
அப்பாவும் மாமாவும்.

பொங்கல் பானைகளுக்கு
பட்டை தீட்டும் ஒப்பனை
கனவில்
பாட்டியும் சித்தியும்.

முப்போக விளைச்சலுக்கு
வானம் பொய்தாலும்
புத்தாடைக் கனவில்
குழந்தை குட்டிகள்.

முன்பொரு காலத்தில்
வெகு சிறப்பாய்
கொண்டாடிய
பொங்கல் பண்டிகையை
மனது நிறையாமல்
நாமும்
கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

தை பிறந்ததும்...
வழி பிறக்கும் ஒரு சடங்காய்!

## இயல்பாய் ஒரு மௌனம்

கோபக் கணையின்
முடிச்சுகளோடு மௌனத்தை
உடைத்துக் கொண்டு
குபீரென்று சிதறலாயின
வார்த்தைகள்.

சிதறிய வார்த்தைகளில்
வன்சொற்களின் ஆதிக்கம்
இருப்பதை எதிரிலிருக்கும்
உன் முகத்தில்
காணமுடிகிறது என்னால்.

மௌனம் உடைய
காரணமாயிருந்த உன்
வார்த்தைகளை
செவி சாய்த்திடாமல் நான்
தவிர்த்திருக்கலாம்.

முட்டாளாக வேண்டுமென்று
வலிய முடுக்கப்பட்டதை
அறியாமல்
முட்டாளாகிப்போனேன்.

இயல்பாய் ஒரு மௌனம்
புதுப்பொலிவுடன்
என்னில் சூல் கொள்ள
சிறிது காலமாகலாம்.
அதுவரை
நான் காத்திருக்கப் போகிறேன்.

எதிரியின் வஞ்சக வலையிலும்
சூட்சும வட்டத்திலும் சிக்காமல்
இருத்தலே
இன்றைக்கு மட்டுமின்றி
என்றைக்கும்
நன்மையென்று அறிகிறேன்
நான்.

## கடவுளென்று சொல்லுவதில்...

நேர்கோட்டின் உயரத்தைக்
கூட்டி அதிகரிக்காமல்
பக்கத்தில்



பெரிய கோடிழுத்து
கோட்டைப் பெரிதாக்கும்
கலையைக் கற்றுக் கொண்டது
என் குழந்தையிடம்தான்.

ஐ படம் பார்க்க வேண்டுமா?
எனக் கேட்ட குழந்தை
பாடபுத்தகத்தில்
கண் படத்தைக் காட்டி
என்னைப் பரிகசித்தது.

விருந்தினரை
சாப்பிட இலையில்
உட்காரச் சொன்னதற்கு
அவரைக் கோரைப் பாயில்
அமரவைத்து
என்னைக் கேலி பேசியதும்
என் குழந்தைதான்.

எனக்குப் பலூன் பயத்தைப் போக்கி
அதைப் பெரிதாய்
ஊதக் கற்றுக் கொடுத்ததும்
என் குழந்தைதான்.

நமது தவறுகளையும் குறைகளையும்
கண்டு களைவது
குழந்தைகளெனும் போது
அவர்களை
கடவுளென்று சொல்வதில்
மறுப்பேதுமில்லை
எனக்கு.

- பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

# கானல் சந்தோசம்

குட்டி குட்டியாய் புள்ளிகளில்
குயவனின் நேர்த்தியோடு
பந்தயங்கட்டி பல வண்ணத்தில்
புதுப்புது பானைகள் செய்து

பனியொழுகும் நடுஇரவில்
விறகினிலே தீமூட்டிச் சமைத்து
பானை தனின்
அகன்ற வாயினின்று
வெண்பொங்கலும்,
சர்க்கரைப் பொங்கலும்
பொங்கி வழிய

கட்டிக் கன்னலும்
முற்றிய நெல்மணியும்
பருத்த மஞ்சக் கிழங்கும்
நீர் பெருத்த தேங்காயும்
கனிந்த வாழையும்
படையலென இட்டாச்சு
தத்ரூபமாய் வரைந்த கோலத்தில்

பொழுது புலர
விசும்பு கீறி
கற்றைக் கதிர்களோடு
வந்து சேர்கிற கதிரோனுக்கு

கிராமத்தை விட்டுப்
புலம் பெயர்ந்த எனக்கு
என் நகரத்து வீதியில்

இது தான் நான் படைக்கும்
பாரம்பரியம் மாறாத
கதிரவன் பொங்கல்!

மற்றபடி
மூன்றுக்கு இரண்டரையடி
பூஜையறைக்குள்
கேஸ் அடுப்புப் பொங்கல் தான்

வரியடுப்பு வைத்து
குலவையொலி போட்டு
முனீஸ்வரன் கோயிலில்
பங்காளிக் கூட்டத்தோட
கும்பிட்டப் பொங்கலின்
நினைவை எப்படியும்
சமன்செய்ய இயலவில்லை

கிராமத்துத் தோழியொருத்தி
காணொளி அழைப்பில்
தைத்திருவிழாவின்
மெய்நிகர் தரிசனம்
காண்பிக்கையில்
கானல் சந்தோசத்தோடு
நிறைகிறதென் தைத்திருநாள்

—

பி. ஹேமா,
முசிறி.



கோலம்: **க. சந்திரிகா,**
திருநெல்வேலி.

# குறைவற்றோர் அறிவுடையோர்!

பாவகை: வெண்ணிலாக் கண்ணி

1) குளத்தினையும் வெட்டிடவே
வெண்ணிலாவே - கரையோ
குளம்நீரைக் காத்திடுமே
வெண்ணிலாவே!

2) கடலுக்குக் கரையேது
வெண்ணிலாவே- நாமும்
கடலென்றே வாழ்ந்திடுவோம்
வெண்ணிலாவே!

3) குறைவற்ற அறிவுடையோர்
வெண்ணிலாவே - யாரும்
குறைச்சொன்னால் குறைவாரோ?
வெண்ணிலாவே!

அறிவுடையோர் அஞ்சிடுவோர்!

பா வகை: வெண்ணிலாக் கண்ணி

1) நிறையழகை யுடையவளே
வெண்ணிலாவே - இருளில்
நிறைந்திடுமே அச்சமெங்கும்
வெண்ணிலாவே!

2) பார்வையுள்ளோர் விழிகளுமே
வெண்ணிலாவே- இருளில்
பார்வையினால் அஞ்சிடுமே
வெண்ணிலாவே!

3) அறிவுடையோர் பழியென்றால்
வெண்ணிலாவே - வாழ்வில்
அறிவுடனே அஞ்சிடுவர்
வெண்ணிலாவே!

—



வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
துபாய்.

# கால்களை விற்பவன்

இடம் கிடைக்கப்பெற்ற
பரபரப்பான சாலை ஒன்றின் ஓரத்தில்
நாற்காலிகளை வரிசைப்பட அடுக்கி
விற்பனைக்கு வைத்துவிட்டு நாற்காலி
ஒன்றின்மீது சாவகாசமாக
அமர்ந்திருக்கிறான் வியாபாரி
அவனைக்கடந்து ஓடிக்கொண்டிருந்தனர்
உட்காருவதற்கு நேரமற்ற மனிதர்கள்...!

—

நேசன் மகதி

# மனந்தடுமாறேல் ?!!?

உலகம் உரிமத்தின்
உன்னதங்களை பகுத்திட.. உள்வாங்கி
சிற்றின்ப
பேரின்ப வசியங்களில்...

வளரும் தீமைச் செடியினைக்
களைந்தே...
மலரும் பூவின் மணமும் உணர்ந்தே...

மகிழ்வை நினைத்து
மனம் கொத்திடாதே...
ஊஞ்சலாடும் இதயத்தினை தட்டிக்
கொண்டாடிடு....

கடமைகள் கடலலையாய்
கண்முன் மலையாகிட..
சுவடுகள் எல்லாம் நேர்மறையில்
கண்டிடு....

ஒற்றுமை வேள்வியிலே
ஒழுக்கம் ஒளிர்ந்திட..
சூரியனின் உதயமாய்
மனமும் விரியட்டுமே....

- கவிமணி
இரஜகை நிலவன்,
மும்பை.

---

# பத்து மாதம் சுமந்த

குழந்தைகளின்
பிறந்த நாளை
மறந்து விடுகிறார்கள்...

வாழ்க்கையின் இறுதி
வரை உடன்
வரப்போகும்
மனைவியின் பிறந்தநாளை
மறந்து விடுகிறார்கள்...

தன்னை பத்து மாதம்
சுமந்த தாயின்
பிறந்தநாளை மறந்துவிடுகிறார்கள்...

தன் உடன் பிறந்த
சகோதரர்களின் பிறந்தநாளை
மறந்து விடுகிறார்கள்...

தன்னை மார்பிலும் இதயத்திலும்
சுமந்த தந்தையின் பிறந்தநாளை
மறந்து விடுகிறார்கள்...

தனக்காகவே உழைத்து
தன்
குடும்பத்திற்காக வாழும்
நடிகரின் பிறந்த நாளை
மட்டும் மறக்காமல்
கொண்டாடி விடுகிறார்கள்...
ஒவ்வொரு வருடமும்!



- மு. முபாரக்,
திருச்சி.

# சொல்வது எல்லாம்...



A.S. சுந்தரராஜன்

தொடர்ந்த
நாளின் பெரும்பகுதியை
செய்தொழிலின்
அழுத்தப்பணிகள்
ஆக்கிரமிக்கும் போது
நாளை விடுமுறையாய்
இருக்ககூடாதா

செயலுக்கு பின்
முடிவு சாதகமாக
இருக்காது என்று
தெரிந்த பின்
காத்திருப்பு காலங்களில்
ஏதாவது அதிசயம்
நடக்காதா

வாக்குவாதம்
உச்சம் தொடங்குகையில்
உறவும்
நட்பும்
பகைமையாகும் முன்
வேறு நிகழ்வுகள்
நடந்து முற்றுப்பெறாதா

புரிந்து கொள்ள வேண்டிய
செய்ய வேண்டியவை
பற்றி நீள விளக்கங்கள்
கொடுக்கையில்
கேட்பவர்
கவனகுவிப்பும்
சிந்தனை சிதறல்
இல்லாமால் இருப்பரா

என எண்ணுவது
மனித மனங்கள்

சொல்வது எல்லாம்
வாழ்வியல்
யதார்த்தம்

இவர் எப்பவுமே
இப்படித்தான்...

ஓர்
எதிர்பார்த்த
எதிர்பாராத
வெற்றியில்

அழுத்த பணிகள்
இல்லாத நிலையில்

விருப்ப நிகழ்வில்
கிடைத்த அங்கீகாரத்தில்
கொடுக்கப்பட்ட பாராட்டில்

மனம் ஆனந்தப்படுகையில்

இவர் எப்பவுமே
இப்படித்தான்

இனிமே

தோல்வியே கிடையாது
குறுகிய காலக்கெடுவுடன்
அழுத்த பணிகள் வராது
ஏளனம் பரிசாகாது
வசை மொழியை வரப்போவதில்லை
விரும்பதகாத

நிகழ்வே நடக்காது

என்பது மாதிரி

அவை எல்லாம் வந்தவுடன்
ஏதாவது செய்து சரி செய்
என்று என்னிடம் வந்து
தொண தொணக்க வேண்டியது
புலம்பல்
புத்தியிடமிருந்து..

## சேர்த்து கொண்டே போக

பிடிக்காத
பேச்சுக்கும்
கருத்துக்கும்
கேலிக்கும்
தவறான புரிதலுக்கும்

வெளிப்படுத்த
விருப்பம் எனில்
பதில் மொழி
சொல்லலாம்
இல்லேயெனில்
இடம் பெயரலாம்

அதை விடுத்து
அந்த கணத்தை
வைத்து

உண்மை தெரியாமால்
நாமாக யூகம் கொண்டு

அவர்
குணம் சரியில்லை
பார்வை சரியில்லை
தவறாக தெரிகிறார்

உதட்டு மொழியில் கர்வம்

என அபிப்பிராயம்
கொண்டும்
பிறரிடம் சொல்லியும்

தவறானவற்றை
சேர்த்து கொண்டே
போக
பணமா
திறமையா

சேர்த்துக்கொண்டே போனால்
மன அமைதி தான்
பாழாகும்

## அது என்னவோ?

மனித வாழ்வில்
மறதி எல்லோருக்கும் உண்டு

என்ன ஒன்று
மனிதர்க்கு மனிதர்
மாறுபடும்

அது என்னவோ

சாதித்த விஷயங்கள்
நம்பிக்கை நிகழ்வுகள்
பாராட்டு பெற்ற தருணங்களை விட

அவமானப்பட்டது
தோற்றது
வசைமொழி பரிசானது
இழந்தது
சோகத்தை
சொந்தம் கொண்டாடியது

ஒன்று விடாமால்
ஞாபகம் வந்து

இன்றையவைகளையும்
நாளையவைகளுக்கும்
பயத்தையும்
பதற்றத்தையும்
கொடுக்கிறது

## எது வரை?...

வெளியூலக
ஆச்சாயர்களும்
மகிழ்வுகளும்
நிகழ்வுகளும்
செய்திகளும்

நம்மோடு
பயணிப்பது

எது வரை?

மனதுக்குள்
பூகம்பமோ
சுய இரக்கமோ
வருத்தங்களோ
ஏக்கங்களோ
இதுவா? அதுவா?
என்ற பட்டிமன்றமோ
இல்லாத வரை...

## நமக்கு நாமே...

வெற்றியின்
மகிழ்ச்சியை
இப்போதே அனுபவி

சோகமும்
தோல்வியுமா
இந்த முறை தான்
இது நிரந்தரமில்லை

அவமானமும்
கடும் வசை சொற்களுமா
எப்போதாவது தான்
வாழ்க்கை முழுவதும் இல்லை

முடிவு எடுப்பதில்
குழப்பமா
இடைவெளி விட்டு
மீண்டு யோசி
புதிய தீர்வு கிடைக்கும்

நெருங்கிய மரணமா
அழுது தீர்த்து விட்டு
அடுத்தவற்றுக்கு
தயாராகத்தான் வேண்டும்

என்ற
நிலையாமை
வாழ்க்கை தத்துவங்கள்

பிறருக்கு சொல்லவும்
குழுவாய் இருக்கையில்
பேசவும் முடிகிற
நம்மால்

அது நிகழும் கணத்தில்
நமக்கு நாமே
சொல்லிக்கொள்ள
முடிகிறதா?

பெரும்பாலும் இல்லை

## சுய புராணம்

படைப்புகள்
எழுத ஆரம்பித்த
காலத்தில்

மனதால்
தலைப்பு முதல்
உள்ளடக்கம் வரை
முழுதாய் எழுதி விட்டு
பிறகு தாளில்...

தற்போது

கருப்பொருள்
பற்றி மட்டும்
யோசித்து விட்டு

எழுதும் பொழுதினில்
வரிகளையும்,தலைப்பையும்
முடிவு செய்தல்
அனுபவத்தால்...

ஆனால்

அன்றும்
இன்றும் சரி
'கருப்பொருளுக்கான தேடல்'
சவால் தான்...

## எப்பத்தான்...

ஒரு இடர்பாட்டுக்கு
பதற்றமும்

ஓர் வசைமொழிக்கும்
அவமானத்துக்கும்
உடைந்து போவதும்

ஓர் தோல்விக்கு
புலம்புவதும்

ஓர் எதிர்பார்ப்பு
ஏமாற்றமாகையில்
முடங்குவதும்

ஓர் வெற்றியில்
ஆட்டம் போடுவதையும்

என முழுவதும்
உணர்வு ரீதியாய்
இருப்பதை எப்போது தான்
நிறுத்தப்போகிறாய்?

மீண்டவர்களின்
பார்த்த
செவி கொடுத்த
பகிரப்பட்டதை கேட்ட பின்னும்
ஏன் உன் சொந்த அனுபவத்தில்
அறிந்த பின்னும்

புத்தியின் கேள்வியாய்
மனித மனங்களிடம

## அவரவர் பார்வையில்...

நமக்கான மகிழ்ச்சிக்கான
விடயம்
பிறருக்கு
'இதுக்கு போயா?

நமது வேதனைக்கான
காரணம்
பிறரால்
'யாருக்குத்தான் இல்லை'

நாம் உணருகின்ற
நம்பிக்கை நிகழ்வுகள்
பிறரால்
இது என்ன பெரிய விஷயம்?

நாம் சொல்கின்ற
பரிதாப நிகழ்வுகள்
பிறரால் எங்கு தான் இல்லை?

## ஆமா தானே?

நீண்ட யோசனைக்குப்பின்
தெளிவான திட்டம்

முயற்சிக்கும் பயிற்சிக்கும்
பின் கைவந்த திறமை

செயலுக்கு தயாராக
கடின உழைப்பு

எடுத்து கொண்ட
விடயத்தில் ஆத்மார்த்தம்

இத்தனையும்
இருந்தாலும்

செயல்பாட்டுக்கு
காலத்திலும்
முடிவுக்கு காத்திருக்கையிலும்

உதடுகளோ
மனதுக்குள்ளோ
'கடவுளே கடவுளே'
என்று முணு முணுப்பது
மனித இயல்பு தானே....

## கேட்கையில்

சந்தித்த
சவால்களை

இழப்பின்
சோகத்தை

முயற்சிக்குப்பின்னாலும்
கிடைத்த தோல்வியை

எதிர்பார்ப்பில்
ஏமாற்றத்தை

திறனுக்கான
அங்கீகாரத்தை

செயலுக்குப்பின்னான
தன்திருப்தியை

சரியாய் சொல்லப்பட்ட
யூகத்தை

இயலாதவருக்கு செய்ய
முடிந்த உதவியை

உதட்டு மொழியால்
செவிக்கு செல்கையில்

தன் அனுபவங்களும்
நினைவுகளாய்
தவிர்க்க இயலாதாய்

## அன்றும் இன்றும்...

அன்றைய
நட்பின்
உரையாடல்

திரைப்படம்
விளையாட்டு
விசேஷ நாட்கள்
ஊர் திருவிழா
பற்றியது

இன்று
செய்தொழில் நிலவரம்
எதிர்கால யோசனை
சமகால நிகழ்வுகள்
பற்றிய எண்ணபரிமாற்றம்
பழைய நண்பர்கள் பற்றிய
விசாரிப்பு

அன்று
நட்பின் உறவுகளுடன்
ஆன விவாதத்தில்
தான் சரி என்று
நிருபிக்கும் முயற்சி

இன்று
மாற்றுக்கருத்தை
உதட்டு மறுமொழி தவிர்த்து
அமைதியாய்
இடம் பெறுதல்

அன்று
வளர்த்து ஆளாக்கிய
இரத்த உறவுகள்
எப்போதாவது சொல்லும்
கடுஞ்சொல்லுக்கு
முடிந்தால்
அதே வேகத்தில் பதில்
இல்லையெனில்
முகம் வாடி
கண்கள் சிவந்து
கண்ணீர்

இன்று
செய்தொழிலில்
தனக்கான செயலுக்கோ
பிறரின் செயலுக்கான
பொறுப்போகவோ
அடிக்கடி
வசைமொழி கிடைக்கையில்
வெளியில் சொல்லமுடியாமாலும்
உள்ளே முழுங்க முடியாமாலும்
மனதுக்கு உள்ளேயே
புலம்பல்

அன்று
கேட்பவருக்கு
பிடிக்கிறதோ
இல்லேயோ
வாய் ஓயாமால்
பேச்சு

இன்று
எதிர் மனிதன்
குணம் அறிந்து
உடல் மொழி பார்த்து
பேச்சு

காரணங்களாய்
கிடைத்த அனுபவங்கள்
அனுபவங்களால்
வாழ்க்கை பற்றிய
பார்வை
பெற்ற மனப்பக்குவம்

இப்படின்னா அப்படி
அப்படின்னா இப்படி

முன்பு

தன் விருப்ப
யோசிக்க வைத்த
புத்தகங்களை
ரசித்து படித்த பொழுதுகள்

மனது நினைத்தை
உதட்டு மொழியாக்கி
தோழமைகளோடு
கழித்த மணி நேரங்கள்

சொல்லுக்கும்
செயலுக்கும்
முன்யோசனைக்கும்
பாராட்டாய்
அங்கீகாரம் கிடைத்த
நேரங்கள்

இன்று யோசிக்கையில்
நேர்மறை சிந்தனையானால்
ஊக்கமும்
உவகையும்
விளைவாய்
நாளைய பற்றிய
நம்பிக்கையும்

எதிர்மறை சிந்தனையானால்
எப்படி இருந்த
நாம் இப்படி
ஆகி விட்டோம்

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



ஓவியம்:
**மா. நிரல்யா,**
**மூன்றாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.